# ABS MARINE SERVICES LIMITED

(FORMERLY KNOWN AS - ABS MARINE SERVICES PRIVATE LIMITED)

Tel : +91-44-4291 4141 Fax : 91-44-4291 4145

Email : absadmin@absmarine.com Website : www.absmarine.com

CIN NO : L71120TN1992PLC023705


Date: 23/05/2026

Ref: ABS/NSE/014/2026-27

To,
The General Manager,
Listing Department
National Stock Exchange of India Limited,
Exchange Plaza, Bandra Kurla Complex,
Mumbai — 400051

**COMPANY CODE: ABSMARINE**

Dear Sir,

Sub: Compliance of Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.

In terms of regulation 47 of SEBI (LODR) Regulations, 2015, please find enclosed herewith copy of advertisement clippings carrying Audited financial results of the Company for the half year and Year ended 31st March 2026, published in Makkal Kural on May 22, 2026 and Financial Express on May 23, 2026, for your records and dissemination.

This is for your kind intimation.

Thanking you.
Yours faithfully,
**FOR ABS MARINE SERVICES LIMITED**

GANESH SAIKRISSHNA

Digitally signed by GANESH SAIKRISSHNA
Date: 2026.05.23 15:41:02 +05'30'

**GANESH SAIKRISSHNA**
**COMPANY SECRETARY AND COMPLIANCE OFFICER**
**M.No-A72209**

# சென்னை மாநகர காவல்துறை புதிய கமிஷனராக அமல்ராஜ் பொறுப்பேற்பு



**சென்னை, மே 22–**
**சென்னை மாநகர காவல்துறை புதிய கமிஷனராக அமல்ராஜ் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு காவல்துறை உயர் அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.**

முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் (தவெக) அரசு பொறுப்பேற்ற பிறகு பல்வேறு முக்கிய பொறுப்புகளுக்கான அதிகாரிகள் மாற்றப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகள் மாற்றப்பட்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக தமிழக உளவுப் பிரிவில் நேர்மையான போலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் சிவில் சப்ளைஸ் சிஐடி டிஜிபியாக வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டார். மேலும் மாவட்ட அளவில் எஸ்பிக்கள் மாற்றப்பட்டனர். அந்தவகையில் தற்போது, சென்னை மாநகர போலீஸ் கமிஷனராக பணியாற்றி வந்த அபின் தினேஷ் மோடக் பணியிடமாற்றம் செய்யப்பட்டார். சென்னை மாநகர கமிஷனராக இருந்த அருண், தேர்தல் நேரத்தில் மாற்றப்பட்டார். அவருக்கு பதிலாக அபின் தினேஷ் மோடக் நியமிக்கப்பட்டார். தற்போது அவர் சிபிசிஐடி கூடுதல் போலீஸ் டிஜிபியாக நியமிக்கப்பட்டார்.

இதையடுத்து, சென்னை மாநகர புதிய போலீஸ் கமிஷனராக கூடுதல் டிஜிபி அமல்ராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சட்டம் ஒழுங்குக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் காவல்துறையில் தொடர்ந்து பல்வேறு பணியிட மாற்றங்கள் நடைபெற்று வரக்கூடிய நிலையில், சென்னை மாநகர காவல் ஆணையராக அமல்ராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளது கவனம் பெற்றுள்ளது.

### பிஹெச்டி பட்டம் பெற்றவர்

அமல்ராஜ் 1996ஆம் ஆண்டு பேட்ச் ஐபிஎஸ் அதிகாரி ஆவார். திருப்பூரில் உதவி போலீஸ் சூப்பிரண்டாக பணியை தொடங்கினார். காவல் துறையில் பணியாற்றி கொண்டே கல்வித் துறையிலும் ஆர்வம் காட்டி 'டாக்டரேட்' (Ph.D) பட்டம் பெற்றுள்ளார். தொடர்ந்து மதுரையில் துணை காவல் ஆணையராகப் பணியாற்றினார். தர்மபுரி, தேனி, காஞ்சீபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் காவல் கண்காணிப்பாளராகப் (SP) பணியாற்றியுள்ளார்.

அதன் பின்னர் ஐஜியாக பதவி உயர்வு பெற்ற பிறகு, தமிழகத்தின் முக்கிய மாநகரங்களான சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய மூன்று நகரங்களிலும் காவல் ஆணையராகப் பொறுப்பு வகித்துள்ளார். திருச்சி (மத்திய மண்டலம்) மற்றும் கோவை (மேற்கு மண்டலம்) ஆகிய மண்டலங்களின் ஐஜியாகவும் முத்திரை பதித்துள்ளார். திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் காவல் ஆணையராக இருந்தபோது, நகரம் முழுவதும் அதிநவீன உயர் தெளிவுத்திறன் கொண்ட (High Definition) சிசிடிவி கேமராக்களைப் பெருமளவில் நிறுவினார். இந்தத் திட்டத்தின் மூலம் அந்தந்த நகரங்களில் குற்றச் சம்பவங்கள் சுமார் 40 சதவீதம் வரை குறைந்தன.

### தாம்பரம் கமிஷனராக

சென்னை மாநகரத் தலைமையிட கூடுதல் ஆணையர், ஏடிஜிபி (Operations), மற்றும் தமிழ்நாடு போலீஸ் அகாடமியின் (TNPA) இயக்குநர் போன்ற உயர் பதவிகளை வகித்துள்ளார். அண்மையில் புதிதாகத் தொடங்கப்பட்ட தாம்பரம் மாநகரக் காவல் ஆணையரகத்தின் 2வது காவல் ஆணையராக நியமிக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார். கூடுதல் டிஜிபியாக பதவி உயர்வு பெற்ற பிறகு தாம்பரம் போலீஸ் கமிஷனராக 2 முறை பணியாற்றியுள்ளார். தாம்பரம் மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் ரவுடியிசம் மற்றும் கட்டப் பஞ்சாயத்துகளை ஒடுக்குவதைத் தனது முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டார்.

### குடியரசு தலைவர் பதக்கம் பெற்றவர்

காவல் துறையின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவது, சட்டம்ஒழுங்கைப் பேணுவது மற்றும் போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதில் புதிய உத்திகளைக் கையாண்டார்.

அவரது சிறப்பான மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய மக்கள் பணிக்காகப் பல்வேறு உயரிய விருதுகளைப் பெற்றுள்ளார். குடியரசுத் தலைவரின் தகைசால் பணிப் பதக்கம், சிறப்புப் பணிக்கான போலீஸ் பதக்கம், முதலமைச்சரின் சிறப்புச் செயல்பாட்டுப் பதக்கம், பொதுச் சேவையில் சிறந்த விளங்கியதற்கான முதலமைச்சரின் பதக்கம் பெற்றுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை அவரது சொந்த ஊராகும். நாகர்கோவில் கார்மல் பள்ளியில் மேல்நிலைப் படிப்பை முடித்த அமல்ராஜ் பின்னர் திருச்சி புனித ஜோசப் கல்லூரியில் தனது பட்டப்படிப்பை முடித்தார். கல்லூரியில் அமல்ராஜ் ஹாக்கி விளையாட்டு வீரராக மிளிர்ந்தவர். அது மட்டுமின்றி தேசிய மாணவர் படையிலும் அங்கம் வகித்தார். ஐபிஎஸ் காவல் பணியில் சேர்ந்த பிறகு அமல்ராஜ் மனிதவள மேலாண்மைத் துறையில் எம்பிஏ பட்டமும், மதுரை காமராஜர் பல்கலையில் டாக்டர் பட்டமும் பெற்றவர். துப்பாக்கி சுடும் போட்டியில் ஆர்வம் மிகுந்த அமல்ராஜ் தேசிய மற்றும் மாநில அளவில் நடந்த காவல்துறையினருக்கான துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கு பெற்றார். மாநில அளவில் சாம்பியன் பட்டமும் வென்றுள்ளார்.

### உயர் அதிகாரிகள் வாழ்த்து

திருச்சி, கோவையில் உலகத் தரம் வாய்ந்த துப்பாக்கி சுடும் தளங்களை காவல்துறை சார்பில் அமல்ராஜ் அமைத்தது குறிப்பிடத்தக்கது. அதே போல கோவை மற்றும் சென்னை எழும்பூரில் மாநிலத்திலேயே முதன் முறையாக போலீஸ் மியூசியம் அமைத்து முனைப்பாக செயல்பட்டவர். காவல் பணி மட்டுமின்றி எழுத்திலும் அமல்ராஜ் சிறந்த புலமைப் பெற்றவர். "காவல்துறையினருக்கு வெற்றி தரும் மேலாண்மைப் பண்புகள்", "வெற்றியாளர்களின் வெற்றிப் படிகள்", "வெல்ல நினைத்தால் வெல்லலாம்" "சிறகுகள் விரித்திடு", "போராடக் கற்றுக்கொள்" ஆகிய ஐந்து நூல்களை இவரே எழுதிய புத்தகங்கள் வெளி வந்து காவல்துறையினரால் பாராட்டை பெற்றது.

சென்னை மாநகர காவல்துறை கமிஷனராக அமல்ராஜ் இன்று காலை பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு காவல் துறை அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. உயர் அதிகாரிகள் பலர் வாழ்த்து தெரிவித்தனர்.

# இந்தியாவின் சந்திரயான்–3 திட்டம்; அமெரிக்க விண்வெளி நிறுவனம் விருது

**சென்னை, மே. 22–**
**2026ம் ஆண்டிற்கான கோடார்ட் விண்வெளி ஆய்வு விருதை இந்தியாவின் சந்திரயான்3 திட்டத்திற்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் வழங்கியது. அமெரிக்காவிற்கான இந்தியத் தூதர் வினய் குவாத்ரா இந்த விருதை பெற்றுக்கொண்டார்.**

சந்திரயான்3 என்பது இந்திய விண்வெளி ஆய்வு மையத்தால் நிலவின் தென் துருவப் பகுதியை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்ட விண்கலத் திட்டமாகும். நிலவின் மேற்பரப்பில் விண்கலத்தை மெதுவாகவும் பாதுகாப்பாகவும் தரையிறக்கும் திறனை நிரூபித்ததன் மூலம், உலக அளவில் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்ற வரலாற்றுச் சாதனையை இந்தியா படைத்தது.

இந்தியத் தூதர் வினய் குவாத்ரா பேசிய போது, பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வையையும், விண்வெளி ஆய்வு, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் ஆகியவற்றிற்கான இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கையை எடுத்துரைத்தார்.

அவர், விண்வெளி ஆய்வில் இந்தியா மற்றும் அமெரிக்கா தொழில்துறைகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தவும் அழைப்பு விடுத்தார். கோடார்ட் விண்வெளி ஆய்வு விருது என்பது விண்வெளித் துறையில் மிகச் சிறப்பான சாதனைகளுக்காக அமெரிக்க விண்வெளி நிறுவனம் வழங்கும் மிக உயரிய விருதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.




புனே நிபே நிறுவனத்தின் தயாரிப்பு

# 100 கி.மீ. இலக்கை துல்லியமாக தாக்கும் வாயு அஸ்த்ரா–1 ஏவுகணை சோதனை வெற்றி

**ஜெய்ப்பூர், மே 22–**
**உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வாயு அஸ்த்ரா –1 ஏவுகணை சோதனையை புனேவைச் சேர்ந்த பாதுகாப்புத் தொழில்நுட்ப நிறுவனமான நிபே லிமிடெட் வெற்றிகரமாக செய்து முடித்தது. இது இந்திய ராணுவத்தின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட இருக்கிறது.**



ராஜஸ்தானில் நடத்தப்பட்ட இந்த சோதனையில் 10 கிலோ எடை கொண்ட ஏவுகணை சுமார் 100 கிலோ மீட்டர் பறந்து சென்று இலக்கை துல்லியமாக தாக்கி அழித்துள்ளது. சோதனையின் போது தாக்குதலை நடுவிலேயே ரத்து செய்யவும், மீண்டும் திருப்பி தாக்கும் திறன்களை கொண்டுள்ளது. தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து 70 கி.மீ தொலைவில் உள்ள மற்றொரு முன்களக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு ஏவுகணையின் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டை மாற்றும் திறன் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

உத்தரகண்டின் ஜோஷிமத் பகுதியில் ஏவுகணையின் தொழில்நுட்ப மற்றும் உயர் மலைப்பகுதி சோதனைகள் நடத்தப்பட்டன. 14,000 அடிக்கும் அதிகமான உயரத்தில், 90 நிமிடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து பறந்து ஏவுகணையின் நீண்ட நேரத் திறன் சோதனை செய்து பார்க்கப்பட்டது. முக்கியமாக, இலக்கை துல்லியமாக தாக்கி அழித்த பிறகு, இந்த ஏவுகணை மீண்டும் பயன்படுத்தும் திறனை கொண்டது.

முன்னதாக, மே 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சூர்யஸ்த்ரா ராக்கெட்டுகளின் ஏவுதல் சோதனைகளை இந்த நிறுவனம் வெற்றிகரமாக நடத்தியது. இந்த ராக்கெட்டுகள் 150 கி.மீ மற்றும் 300 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் வரம்பைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

அவசர கதியில் ஒப்புதல் எதிரொலி

# மின்வாரிய அதிகாரிகள் இருவர் சஸ்பெண்ட்: அமைச்சர் நிர்மல்குமார் நடவடிக்கை

**சென்னை, மே.22–**
**அவசர கதியில் ஒப்புதல் அளித்த விவகாரம் தொடர்பாக மின்சார வாரிய உயர் அதிகாரிகள் 2 பேர் அதிரடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.**

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் எரிசக்தி வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் முன்னிலையில் அனைத்து அதிகாரிகளுடனும் தனது முதல் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்.

இந்த ஆய்வின்போது தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தின் சமீபத்திய ஒதுக்கீடு மற்றும் ஒப்புதல் வழங்கியதில் வெளிப்படை தன்மை இல்லாமல், அவசர கதியில் ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது தெரியவந்துள்ளது.

இந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முறையான விசாரணை நடப்பதற்கும், நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முறையற்ற நிர்வாக தலையீடு மற்றும் இதர குற்றச்சாட்டுகள் காரணமாக தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் (வருவாய்) வி.காசி, தலைமை என்ஜினீயர் (மரபுசாரா எரிசக்தி) பி.சந்திரசேகரன் ஆகியோர் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல், இந்த குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய ஓய்வு பெற்ற இயக்குநர் (தொழில்நுட்பம்) பசுமை எரிசக்தி கழகம் எஸ்.மங்களநாதன் ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான முறையான விசாரணை நடைபெற்று மின்வாரிய விதிமுறைகளின்படி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மின்சார வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்தவர் பஞ்சாபில் கைது

**பதன்கோட்:**
**பஞ்சாப் மாநிலத்தில் ராணுவ நடமாட்டத்தைக் கண்காணிக்க சிசிடிவி கேமரா பொருத்தி பாகிஸ்தானுக்கு உளவு பார்த்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

பஞ்சாப் மாநிலம் பதன்கோட்டில் உளவுப் பிரிவினர் நடத்திய சோதனையில், இந்திய ராணுவம் மற்றும் துணை ராணுவப் படைகளின் நடமாட்டம் குறித்த ரகசியத் தகவல்களை பாகிஸ்தானுக்குப் பகிர்ந்ததாக ஒரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் ஒரு பெரிய உளவு நெட்வொர்க் முறியடிக்கப்பட்டுள்ளது.

சக் தரிவால் கிராமத்தைச் சேர்ந்த பல்ஜித் சிங், சுஜன்பூரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் அருகே ஒரு கடையில் சிசிடிவி கேமராவைப் பொருத்தி, ராணுவ வீரர்களின் நடமாட்டத்தைக் கண்காணித்து வந்துள்ளார். இந்த நேரடி காட்சிகளை பாகிஸ்தான் மற்றும் வெளிநாடுகளில் உள்ள உளவு அமைப்புகளுக்கு அவர் அனுப்பியதாக மூத்த போலீஸ் அதிகாரி தல்ஜிந்தர் சிங் தில்லான் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது ; பல்ஜித் சிங் ஜனவரி மாதம் கேமராவைப் பொருத்தியதை ஒப்புக்கொண்டார். துபாயைச் சேர்ந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவரிடமிருந்து இதற்காக அவர் ரூ.40,000 பெற்றுள்ளார். ஒரு சிசிடிவி கேமரா மற்றும் வைபை ரூட்டர் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேலும் விக்ரம்ஜித் சிங், பல்விந்தர் சிங் மற்றும் தரன்பிரீத் சிங் ஆகியோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தலைமறைவாக உள்ள மற்றவர்களைப் பிடிக்கத் தேடுதல் வேட்டை நடந்து வருகிறது.

கடந்த மாதமும் பஞ்சாப் போலீஸார் பாகிஸ்தானின் ஐஎஸ்.ஐ ஆதரவுடன் இயங்கிய இரண்டு உளவு குழுக்களைக் கண்டுபிடித்தது குறிப்பிடத்தக்கது.

எபோலா வைரஸ் பரவல் எதிரொலி

# இந்தியா – ஆப்பிரிக்க அமைப்பின் உச்சி மாநாடு ஒத்திவைப்பு

**புதுடெல்லி, மே 22–**
**ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் கொடிய 'எபோலா' வைரஸ் பரவல் காரணமாக இந்தியா – ஆப்பிரிக்க அமைப்பின் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

இந்தியா, ஆப்பிரிக்க ஒன்றியம் ஆகிய இரு தரப்பும் இணைந்து 4–வது இந்தியா – ஆப்பிரிக்கா உச்சி மாநாட்டை டெல்லியில் 28ம் தேதி முதல் நடத்துவதற்குத் தயாராகி வந்தன.

இந்நிலையில், ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் கொடிய எபோலா வைரஸ் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. குறிப்பாக, காங்கோ ஜனநாயகக் குடியரசில் 'பண்டிபுகியோ' என்ற அரிய வகை எபோலா வைரஸ் பரவி வருகிறது. அங்கு இதுவரை 130க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து, உலக சுகாதார அமைப்பு சர்வதேச சுகாதார அவசர நிலையை அறிவித்துள்ளது. இதன் காரணமாக, இந்தியா – ஆப்பிரிக்கா அமைப்பின் உச்சி மாநாடு காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க ஒன்றியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இந்த முடிவை இந்திய அரசு எடுத்துள்ளது.இந்தியாவில் இது வரை எபோலா பாதிப்பு எதுவும் கண்டறியப்படவில்லை. இருப்பினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையக் கண்காணிப்பு, பரிசோதனைகள் மற்றும் தனிமைப்படுத்துதல் நெறிமுறைகளைத் தீவிரப் படுத்துமாறு அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. மாநாட்டுக்கான புதிய தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலமைச்சரின் ஆலோசகர்களாக ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி நியமனம்

**சென்னை, மே 22–**
**முதலமைச்சரின் ஆலோசகர்களாக ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.**

முதலமைச்சர் விஜய் கடந்த 10ந்தேதி பதவி ஏற்ற நாளில் இருந்து தினமும் தலைமைச் செயலகம் வந்து பணியாற்றி வருகிறார். ஒவ்வொரு துறை வாரியாக அதிகாரிகளை அழைத்து ஆலோசனை மேற்கொள்கிறார். எந்தெந்த துறைகளுக்கு யார்யாரை அதிகாரிகளாக நியமிக்க வேண்டும் என்று ஆலோசித்து முடிவெடுக்கிறார்.

இந்த நிலையில் முதலமைச்சர் விஜய் தனது சிறப்பு ஆலோசகர்களாக ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகிய 2 பேரை நியமனம் செய்துள்ளார். இதில் ஜான் ஆரோக்கியசாமி அரசியல் வியூக நிபுணர் ஆவார். தமிழக வெற்றிக்கழகம்தான் ஆட்சியை பிடிக்கும் என்று முன் கூட்டியே கணித்து சொன்னவர். இவரை அரசியல் ரீதியான விவகாரங்களுக்கான ஆலோசகராக நியமித்துள்ளார்.

இதே போல் இன்னொரு ஆலோசகரான விஷ்ணு ரெட்டி மற்ற விவகாரங்களுக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இதற்கு முன்பு ஜோதிடர் ரத்தன் பண்டிட் என்பவர் முதலமைச்சரின் சிறப்பு பணி அலுவலராக நியமிக்கப்பட்டிருந்த நிலையில் எதிர்க்கட்சியினரால் விமர்சனம் செய்யப்பட்டதால் அவரது நியமனம் வாபஸ் பெறப்பட்டது.

இந்த நிலையில் இப்போது ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகியோரை சிறப்பு ஆலோசகர்களாக முதலமைச்சர் விஜய் நியமனம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.


**ஏபிஎஸ் மரைன் சர்வீசஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: எண் 36, வேணுகோபால் அவென்யூ, ஸ்பர் டேங்க் சாலைக்கு அருகில், சேத்துப்பட்டு, சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600031.
CIN:L71120TN1992PLC023705 | www.absmarine.com

**மார்ச் 31, 2026 அன்று முடிவடைந்த அரையாண்டு மற்றும் நிதியாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகளின் தனியான மற்றும் ஒருங்கிணைந்த அறிக்கையின் சுருக்கம்**

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | தனியானது | | | | | ஒருங்கிணைந்தது | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த அரையாண்டு 31/03/2026 (தணிக்கை யானது) | முடிந்த அரையாண்டு 30/09/2025 (தணிக்கை செய்யாதது) | முடிந்த அரையாண்டு 31/03/2025 (தணிக்கை யானது) | முடிந்த ஆண்டு 31/03/2026 (தணிக்கை யானது) | முடிந்த ஆண்டு 31/03/2025 (தணிக்கை யானது) | முடிந்த அரையாண்டு 31/03/2026 (தணிக்கை யானது) | முடிந்த அரையாண்டு 30/09/2025 (தணிக்கை செய்யாதது) | முடிந்த அரையாண்டு 31/03/2025 (தணிக்கை யானது) | முடிந்த ஆண்டு 31/03/2026 (தணிக்கை யானது) | முடிந்த ஆண்டு 31/03/2025 (தணிக்கை யானது) |
| 1 | செயல்பாடுகளின் மூலம் மொத்த வருமானம் | 18,828.35 | 13,953.18 | 10,207.01 | 32,781.53 | 17,550.56 | 18,311.26 | 13,953.22 | 10,233.55 | 32,264.48 | 18,431.34 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 5,100.10 | 3,139.89 | 2,589.03 | 8,239.99 | 3,580.37 | 5,371.69 | 3,264.19 | 2,617.34 | 8,635.88 | 3,651.50 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்). (விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 5,100.10 | 3,139.89 | 2,589.03 | 8,239.99 | 3,580.37 | 5,371.69 | 3,264.19 | 2,617.34 | 8,635.88 | 3,651.50 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்). (விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 4,741.76 | 3,062.47 | 1,966.23 | 7,804.23 | 2,672.35 | 4,946.39 | 3,133.16 | 1,915.59 | 8,079.55 | 2,725.43 |
| 5 | செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம் | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 |
| 6 | ஒரு பங்கு வருவாய் (ரூபாயில்) | | | | | | | | | | |
| | 1. அடிப்படை (ரூபாயில்) | 19.31 | 12.47 | 8.29 | 31.79 | 11.26 | 19.96 | 12.62 | 8.10 | 32.59 | 11.44 |
| | 2. பலமிழந்தது (ரூபாயில்) | 19.31 | 12.47 | 8.29 | 31.79 | 11.26 | 19.96 | 12.62 | 8.10 | 32.59 | 11.44 |

**குறிப்புகள்:**
1. மேலே உள்ளவை செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015ன் விதிமுறை 33ன் கீழ் 31.03.2026 உடன் முடிவடைந்த அரையாண்டு மற்றும் ஆண்டுக்கான, தணிக்கை செய்யப்பட்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். 31.03.2026 அன்று முடிவடைந்த அரையாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் www.nseindia.com என்ற பங்குச் சந்தை இணையதளத்திலும் www.absmarine.com என்ற நிறுவனத்தின் இணையதளத்திலும் கிடைக்கும்.
2. மேற்கூறிய தணிக்கை செய்யப்பட்ட முடிவுகள், தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, 21 மே 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
3. அனைத்து வணிக நடவடிக்கைகளும் ஒரு வணிகப் பிரிவைச் சுற்றியே, அதாவது கப்பல் சேவைகள் பிரிவில் மட்டுமே உள்ளது. எனவே, AS 17ன் படி, நிறுவனம் ஒரு அறிக்கையிடக்கூடிய பிரிவில் செயல்படுவதால், தனித்தனி பிரிவு வெளிப்படுத்தல் தேவையில்லை.
4. முந்தைய காலத்தின் புள்ளிவிவரங்கள் தேவைப்படும் இடங்களில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன/ மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.

இடம்: சென்னை
தேதி: 21/05/2026

குழு உத்தரவின்படி
ஏபிஎஸ் மரைன் சர்வீசஸ் லிமிடெட்
ஒப்பம்/-
கேப்டன் பள்ளியில் நாராயணன் பாலச்சந்திரன்
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN: 00205686.


Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, No.1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600024 on behalf of M/s. Newsmen Associates Private Limited. RNI No. 24383/1973. நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733910, E-mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு இ–மெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.

## SOUTH EAST CENTRAL RAILWAY
### E-TENDER NOTICE

**Tender No.:** RSO-R-RS-Valve-OT-2026-01 Dated: 15.05.2026 **Name of Work:** Supply, Installation and Commissioning of 05 Nos. simulator-based RS Valve Model, for training of Alp's at combined crew lobbies of Raipur Division.
**Tender Value:** ₹ 24,82,720/-,
**EMD:** ₹ 49,700/-,
**Submission of Tender:** Up to **15.30** Hrs. of **16.06.2026** | **Opening of the Tender:** At **15.30** Hrs. on **16.06.2026**
For Further details / purchase of tender document, eligibility criteria & the complete details for the above work, please contact office of Sr.DEE /OP/R or refer / download the tender document which is available on our website **www.ireps.gov.in**.
Manual offers are not allowed against these tenders and any such manual offers received shall be rejected.

**Sr. Div. Electrical Engineer-OP**
**South East Central Railway,**
PR/R/Sr.DEE(OP)/FL/73 **Raipur-492008**
South East Central Railway @secrail

## CORRIGENDUM
### PIRAMAL FINANCE LTD.

Piramal Finance
**CIN: L65910MH1984PLC032639**
**Registered Office:** Unit No.-601, 6th Floor, Piramal Amiti Building, Piramal Agastya Corporate Park, Kamani Junction, Opp. Fire Station, LBS Marg, Kurla (west), Mumbai-400070 T +91 22 3802 4000
**Branch Office:** 1st Floor, KMM Building, Near Hotel Renaiaissance, Palarivattom, Cochin- 682025
Refer to the advertisement of the **E-Auction Sale Notice** published in **Financial Express Kochi Edition,** published on **13-05-2026** under the following Borrowers & LAN No. We wish to mention that due to an inadvertent mistake in the **Auction Date,** was published incorrect **Auction Date,** We therefore, request to read the correct details. Please read the below mentioned details.

| Sr. No. | Borrower Name & Loan Account No. | Wrong Auction Date | Correct Auction Date |
|---|---|---|---|
| 1 | Abdul Kareem K E- 00300008848 | 28.05.2026 | 29.05.2026 |
| 2 | Sobin Joseph - 00300009937 | 28.05.2026 | 29.05.2026 |
| 3 | Binoy Poikathalackal Issac- 12400001257 | 28.05.2026 | 29.05.2026 |
| 4 | Deepa Prabhash- HLSA000464B2 | 28.05.2026 | 29.05.2026 |
| 5 | Anvar P H-05600001541 | 28.05.2026 | 29.05.2026 |
| 6 | Cleatus Leonard Joy - 05600001709 | 28.05.2026 | 29.05.2026 |
| 7 | Sahina Prakash - 05600002345 & 05600002364 | 28.05.2026 | 29.05.2026 |
| 8 | Amal Karattukudiyil Suresh- 12400001024 | 28.05.2026 | 29.05.2026 |
| 9 | Bejoy Kokkattukunnel Scaria - 12400000754 | 28.05.2026 | 29.05.2026 |
| 10 | Fredy Samuel- 12400001483 | 28.05.2026 | 29.05.2026 |
| 11 | Haris Aboobaker-12400001103 | 28.05.2026 | 29.05.2026 |
| 12 | Sreejith Sahadevan - HLSA000660CE | 28.05.2026 | 29.05.2026 |
| 13 | Shabeena P K - 05100003588 | 28.05.2026 | 29.05.2026 |
| 14 | Seetha Lakshmi-12500001164 | 28.05.2026 | 29.05.2026 |
| 15 | Shini - HLSA0000ACDB | 28.05.2026 | 29.05.2026 |
| 16 | Justine D - BLSA00006AB5 | 28.05.2026 | 29.05.2026 |
| 17 | Jayadeep Chakkittayil Divakaran - 02300003281 | 28.05.2026 | 29.05.2026 |
| 18 | Arunkumar Karerat - 00300009341 | 28.05.2026 | 29.05.2026 |

Date : 23.05.2026, Place : Kerala Sd/- (Authorised Officer) Piramal Finance Limited.

## पंजाब नैशनल बैंक ...भरोसे का प्रतीक ! punjab national bank ...the name you can BANK upon !

**Share Department, Board & Co-ordination Division**
Plot No. 4, Dwarka Sector-10, New Delhi-110075
Email Id: hosd@pnb.bank.in

### PUBLIC NOTICE

**Notice is hereby given that Share Certificate of the Bank mentioned below has been reported lost/misplaced/stolen and the registered holders thereof have requested for issue of duplicate share certificate:**

| Sr. No. | Name of Shareholder(s)/ Claimant | Folio No. | Share Certificate No. | Distinctive No. of Shares | No. of Shares |
|---|---|---|---|---|---|
| 1. | Devi Ahuja (Deceased)<br>Kakumal Ahuja (Jt. Holder-1, deceased)<br>Draupadi Ahuja (Claimant) | 1105825 | 16795 | 6738389385-6738389499 | 115 |

In case any person has any claim in respect of the said shares/any objection(s) for the issuance of duplicate certificate in favour of the above stated shareholders, he/she/they should lodge their claim or objection within 15 days of the date of publication of this Notice. If within 15 days from the date hereof no claim is received by the Bank in respect of the said certificate, shares shall be credited in the DMAT account of the above stated Shareholder. The public is hereby cautioned against dealing in any way with the above mentioned certificate.

**Date: 22.05.2026**
**Place: New Delhi**

**For Punjab National Bank**
**(Bikramjit Shom)**
**Company Secretary**

## BAJAJ FINANCE LIMITED

BAJAJ FINANCE
**Registered Office :** Bajaj Finance Limited, C/o Bajaj Auto Limited Complex Mumbai Pune Road Akurdi Pune 411035
**Branch Add:** Bajaj Finance Limited, Ground 1st 2nd Floor Blue Star Arcade TC 81 1888 2 Manjalikulam Road Thampanoor Near Railway Station Trivandrum 695004

### POSSESSION NOTICE (FOR IMMOVABLE PROPERTY)

**(As per Appendix IV read with rule 8(1) of the Security Interest Enforcement Rules, 2002)**

Whereas, the undersigned being the Authorized Officer of **Bajaj Finance Limited (BFL)**, under the provisions of the Securitisation and Reconstruction of Financials Assets and Enforcement of Security Interest Act, 2002 and in exercise of powers conferred under Sec.13(12) read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002 issued demand **by registered post ("Notice")** calling upon the Borrowers/Co-borrowers mentioned here under to repay the amount mentioned in the notice U/s.13(2) of the said Act within a period of **60 days** from the date of receipt of the said notice.
The Borrowers/Mortgagors/Guarantors named below having failed to repay the said amount, notice is hereby given to the Borrowers/ Mortgagors/Guarantors and public in general that the undersigned has taken Symbolic possession of the property described herein below in exercise of powers conferred on me under Sec. 13(4) of the said Act read with Rule 8 of the Security Interest (Enforcement) Rules, 2002. The borrowers in particular and public in general are hereby cautioned not to deal with the said property and any dealing with this property will be subject to the charge of the Bajaj Finance Limited. for the amount mentioned herein below along with interest thereon at contracted rate. **The borrower's attention is invited to provisions of sub-section (8) of section 13 of the Act, in respect of time available, to redeem the secured assets.**

| No. | Loan Account No./Name of the Borrower(s) Mortgagor(s) Guarantor(s) | Description of Property Schedule of Property | Date of Notice U/s.13(2) and U/s.13(2) Notice Amount and Date of Possession |
|---|---|---|---|
| 1 | **LAN: P414PBL4612453**<br>**1. Dileepkumar S S/o Sathyarajan** R/o. Earathu Veedu Dalavapuram Cherunniyoor PO Cherunniyoor Thiruvananthapuram Kerala 695142 Contact: 9746474887 Email id: dileepsathyarajan62@gmail.com **Also at,** R/o. Re.Sy.No. 393/10-2 in Block No. 7 (Old Sy.No. 2311 Cheruninniyur Village Varkkala Taluk Thiruvananthapuram District 695142.<br>**2. Sheeba V W/o Dileep,** R/o. Arathu Veedu Dalavapuram Cherunniyoor PO Vettoor Cherunniyoor Cherunniyur Thiruvananthapuram Kerala 695142 Contact: 9746474887 Email id: dileepsathyarajan62@gmail.com,<br>**3. Visalakshi S W/o Sathyarajan,** R/o. Earathu Veedu Dalavapuram Cherunniyoor PO Cherunniyoor Cherunniyur Thiruvananthapuram Kerala 695142 Contact: 9746474887 Email id: visalakshi11@gmail.com | All that piece and parcel of 06.27 Ares in Re.Sy.No. 393/10-2 in Block No. 7 (Old Sy.No. 2311) in of Cheruninniyur Village Varkkala Taluk Thiruvananthapuram District 695142 along with proportionate share in common areas. **Bounded as: East :** Property of Sulochana; **West :** Property of Kochkrishnan; **North :** Property of Suresh; **South :** Temple Property and Pathway. **As per site visit: East:** Property of Mrs. Sulochana, Mrs. Arundathy; **West:** Property of Mr. Kochkrishnan; **North:** Property of Mr. Suresh; **South:** Way & Property of Temple | **16.02.2026**<br>**Rs. 20,22,274/-** (Rupees Twenty Lakhs Twenty Two Thousand Two Hundred Seventy Four Only)<br>**22.05.2026 at 12:30 PM to 01:30 PM** |

Date: 22.05.2026, Place: Kerala **For Bajaj Finance Limited, Authorised Officer**

## SYMBOLIC POSSESSION NOTICE

**ICICI Home Finance** Registered Office: ICICI Bank Towers, Bandra-Kurla Complex, Bandra (East), Mumbai- 400051
Corporate Office: ICICI HFC Tower, JB Nagar, Andheri Kurla Road, Andheri East, Mumbai- 400059
Branch Office: 2nd floor, AB-106, Old No :134, 4th Avenue, Shanthi Colony, Annanagar, Chennai- 600040

Whereas
The undersigned being the Authorized Officer of ICICI Home Finance Company Limited under the Securitisation, Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and in exercise of the powers conferred under section 13 (12) read with Rule 3 of the Security Interest (Enforcement) rules 2002, issued demand notices upon the borrowers mentioned below, to repay the amount mentioned in the demand notice within 60 days from the date of receipt of the said notice.
As the borrower failed to repay the amount, notice is hereby given to the borrower and the public in general that the undersigned has taken symbolic possession of the property described herein below in exercise of powers conferred on him/ her under Section 13(4) of the said Act read with Rule 8 of the said rules on the below-mentioned dates.
The borrower in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of ICICI Home Finance Company Limited. The Panchnama for refusal of possession of the said mortgaged property by the aforesaid borrower/co-borrowers is filed by duly appointed authorized officer.
The Borrower's attention is invited to provisions of sub-section (8) of section 13 of the Act, in respect of time available, to redeem the secured assets.

| Sr. No. | Name of the Borrower/ Co-Borrower/ Loan Account Number | Description of property/ Date of Possession | Date of Demand Notice/ Amount in Demand Notice (Rs.) | Name of Branch |
|---|---|---|---|---|
| 1. | Mugeshraj J (Borrower), Preethij (Co-Borrower), No 02 Shanmuga Nagar Chitlapakkam Main Road Chennai Chennai 600064 Tamil Nadu, LHANC00001570535 | Flat No 152 5th Floor B Type Block No 1 Sobha Winchester Apartment Mmrd Kovilambakkam Chennai- 600117 Kilakattalai 56/1 Apart 56/2A Part 59/5A 59/5B 60/1A Flat No 152 600117 Tamil Nadu Bounded By- North By: Village Boundary of S. Kolathur, South By: Remaining Portion of Land S.N 56/2A And Land In S.N 59/3 & 59/4 of Kovilambakkam Village, West By: Land In S.Nos 56/1B, 65, 67, 63/2B, 63/2C. 62 & 61/2B of Kovilambakkam Village, East By: Link Road And Lands is S.N59/2./ Date of Possession- 18-05-2026 | 16-02-2026 Rs. 50,12,203/- | Chennai-Annanagar |

The above-mentioned borrowers(s)/ co-borrower(s)/ guarantors(s) are hereby given a 30 day notice to repay the amount, else the mortgaged properties will be sold on the expiry of 30 days from the date of publication of this Notice, as per the provisions under the Rules 8 and 9 of Security Interest (Enforcement) Rules 2002.
Date : May 23, 2026
Place: Chennai
Authorized Officer, ICICI Home Finance Company Limited

## Encore Asset Reconstruction Company Pvt. Ltd.

earc
acting in its capacity as the Trustee of EARC-Bank-029-Trust
**Corporate Office :** 5th Floor, Plot No. 137, Sector - 44, Gurugram-122002, Haryana, India
**Phone :** +91.124.4527200 | **Fax :** +91.124.4527231 **Email :** contact@encorearc.com
**Registered Office :** Caddie Commercial Tower, Regus Business Centre, 5th Floor, Aerocity (Dial), New Delhi, India - 110037.

### POSSESSION NOTICE

Whereas,
Encore Asset Reconstruction Company Private Limited (**"Encore ARC"**), acting in its capacity of being Trustee of EARC – BANK – 029 – Trust, has acquired all rights, title and interests of **Manappuram Home Finance Limited ('Bank')**, in the financial assets of **MUNDASAMY R** originated by the **Bank** under section 5 of the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act 2002 ('SARFAESI Act, 2002') vide Registered Assignment Agreement dated 14-12-2023.
And whereas, the undersigned being the Authorised Officer of the Encore ARC under SARFAESI Act, 2002 and in exercise of powers conferred under Section 13(12) of the SARFAESI Act, 2002 read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002 ('Rules'), issued a demand notice dated **18-12-2024** calling upon the **MUNDASAMY R (Borrower), THANGA SELVI M (Co-borrower 1) and MUTHUSELVI S (Guarantor1)** to repay the amount mentioned in the notice being **Rs. 966165/- (Rupees Nine Lakh Sixty Six Thousand One Hundred Sixty Five Only)** as on **18-12-2024** together with further interest at contractual rate, incidental expenses and costs w.e.f. **19-12-2024**, within **60 days** from the date of receipt of the said notice.
The borrower/guarantor/mortgagor having failed to repay the amount, notice is hereby given to the undersigned being the Authorised Officer of the Encore ARC, to the borrower/guarantor/mortgagor and the public in general that the Authorised Officer has taken possession of the property described herein below in exercise of powers conferred on him under sub-section (4) of section 13 of SARFAESI Act, 2002 read with Rule 8 of Security Interest (Enforcement) Rules, 2002 on 15-05-2026.
The borrower/guarantor/mortgagor in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of Encore Asset Reconstruction Company Private Limited for an amount of **Rs. 1360440/- (Rupees Thirteen Lakhs Sixty Thousand Four Hundred and Forty Only)** as on 18-12-2024, together with further interest at contractual rate, incidental expenses and costs w.e.f. **19-12-2024**. The borrower's attention is invited to provisions of sub-section (8) of section 13 of the SARFAESI Act, 2002, in respect of time available, to redeem the secured assets.

**SCHEDULE**
**Description of Immovable Property**
House Bearing Door No 7634 On Vacant Site To The Extent Of 3397 62 Sqft =315.65 Sqmtr = 7.79 Cents In Natham S No(old)-1475L1A1, As Per New Natham S.No-1852/4, Sivalaperi Village, Palayankottai Taluk, Tirunelveli District, Tirunelveli, P.o Nadavakrichi Eo, Tirunelveli District, Pin Code: 627351 **Boundary Description East-** Vacant Site Belongs To Essaki And Muthupandi **West-** South North Common Lane And Essaki **South-** East West Common Lane **North-** Site Belongs To Irattai Vinayagar Kovil Street

Sd/-
K. Lokesh Kumar
Authorized Officer
Date : 23.05.2026
Place : TIRUNELVELI
Encore Asset Reconstruction Company Pvt. Ltd.


## "IMPORTANT"

Whilst care is taken prior to acceptance of advertising copy, it is not possible to verify its contents. The Indian Express (P) Limited cannot be held responsible for such contents, nor for any loss or damage incurred as a result of transactions with companies, associations or individuals adversing in its newspapers or Publications. We therefore recommend that readers make necessary inquiries before sending any monies or entering into any agreements with advertisers or otherwise acting on an advertisement in any manner whatsoever.


## केनरा बैंक Canara Bank
H.O : BENGALURU

**ASSET RECOVERY MANAGEMENT BRANCH-I**
**No.524, 8th Floor, Canara Towers, Anna Salai, Teynampet, Chennai-600018.**
**Tel.No. 044 - 2849 6339, 2849 6900. E-MAIL:cb2361@canarabank.com, Website: www.canarabank.com**

### POSSESSION NOTICE

WHEREAS, the Authorized Officer of **Canara Bank, ARM Branch 1 Chennai** under Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act 2002 (Act 54 of 2002) and in exercise of powers conferred under Section 13(2) read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules 2002, issued a Demand Notice below mentioned date in respect of the credit facilities availed from our **Canara Bank, Branches below mentioned, the account since been transferred to our Chennai, Asset Recovery Management Branch 1,** against each account as stated herein after calling upon them to repay the amount within **60 days** from the date of receipt of said notice.
The borrowers / guarantors having failed to repay the amount, notice is hereby given to the borrowers / guarantors and the public in general that the undersigned being Authorised Officer of **Canara Bank, Asset Recovery Management Branch I, 8th Floor, Canara Towers, No.524, Anna Salai, Teynampet, Chennai-600 018,** has taken possession of the property described herein below in exercise of powers conferred on him under Section 13 (4) of the said Act, read with Rules 8 & 9 of the said Rules on this the **21st day of May 2026.**
The Borrowers / Guarantors in particular and the public in general are hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of **Canara Bank, Asset Recovery Management Branch I, 8th Floor, Canara Towers, No.524, Anna Salai, Teynampet, Chennai-600 018**, for an amount with further interest and costs thereon.
The Borrowers' / Guarantors' attention is invited to provisions of sub section (8) of section 13 of the Act, in respect of time available, to redeem the secured assets.

**S.No. 1 :** **ARM 1 BRANCH:** **Borrowers Name & Address :** **1. Mrs. Rajalakshmi R, W/o.A Ravi, No** 174 Medai Street, Kilambi Village, Kanchipuram, Tamil Nadu - 631501. **2. Mr. Appadurai (Legal Heir), F/O Mr. Ravi A (Late), 3. Mrs. Kokila (Legal Heir), M/o. Mr. Ravi. A (Late), 4. Mrs. Sudeshini (Legal Heir), D/o. Mr. Ravi. A (Late), 5. Mrs. Subashini (Legal Heir), D/o. Mr. Ravi A (Late), 6. Mr. Deepak (Legal Heir), S/o. Mr. Ravi A (Late), All are address at:** No. 174, Medai Street, Krishnapuram Post, Keezhambi Colony, Kancheepuram Tamil Nadu - 631551.

Demand Notice Date: **04/02/2026 ;** Possession Taken on: **21.05.2026**; Amount outstanding as per Possession Notice: **Rs. 29,58,236.52 (Rupees Twenty Nine lakhs Fifty Eight Thousand Two Hundred Thirty Six and Paise Fifty Two Only) as on 30.04.2026** together with further interest and costs thereon.

**DESCRIPTION OF THE IMMOVABLE PROPERTY: Name of Title Holder: Late Mr. RAVI.** A. All that piece and parcel of the House Property situated at Kanchipuram District, Kancheepuram Registration District, Kanchipuram Taluk, within the registration limit of Kancheepuram Dhamal Sub-Registrar office, No.21, **Kilambi** Village, a house property in "**Sri Vidhya Nagar**" (**DTCP Approval No.204/2008**) (bearing **Plot No.28**, As per **Patta No.2357**, comprised in New Sy.No.630/9, (Old Full Sy.No.630/2B1) measuring North to South 60 Feet and East to West 30 Feet, Total area **1800 Sq.Feet**. North by **Vacant Land**, South by **30 Feet Road**, East by **Plot No 29**, West by **Plot No 27.**

**S.No. 2 :** **KOTTURPURAM BRANCH : Borrowers Name & Address : Mr. Jefferson Prince and Mrs. Benita Shirley. R.**

Demand Notice Date: **06/03/2026 ;** Possession Taken on: **21.05.2026**; Amount outstanding as per Possession Notice: **Rs. 1,50,48,889.43/- (Rupees One Crore Fifty Lakhs Forty Eight Thousand Eight Hundred Eighty Nine And Paise Forty Three Only) as on 30.04.2026** together with further interest and costs thereon.

**DESCRIPTION OF THE IMMOVABLE PROPERTY: Name of Title Holder: Mr. Jefferson PRINCE:** All that Piece and Parcel of House Property, Comprised in Survey Nos 101/3B and 101/3A4B,under Patta No 626,New patta No 11670,Patta Survey No 101/3B1B approved by CMDA approval No 33/97,measuring an extent of 7,830 Sq ft(i.e 727.425 Sq metre)vacant Land,as pper sub division of Land Plot Nos A & B approval dated 16.07.2014,situated on old No82,New No 111, Varadharajapuram Village,Sriperambudur Taluk,Kancheepuram District as per online patta Survey No 101/3B1B,under Patta No 11679 Bounded on the : North By :- Plot NO 107,108 and 109, South By:- 24 Feet Road, East By :- Survey No 101/3A4B(part), West By:- Manimangalam Boundary. Measuring on the: North By :- 134 ½ Feet, South By:- 126 ½ Feet, East By :- 60 feet, West By:- 60 Feet. The above property is situated within the Varadharajapuram panchayath and Kundrathur Panchayat Union Limits and within the Registration District of Chennai South and Registration sub - District of Padappai.

**Date : 21.05.2026; Place : Chennai** **AUTHORISED OFFICER, CANARA BANK**

## THE TAMILNADU INDUSTRIAL INVESTMENT CORPORATION LIMITED

**(Government of Tamilnadu Undertaking)**
**Plot Nos.308 & 309, SIPCOT Industrial Complex, Opp. LAL, Near SBI/HOSTIA Office, Mookandapalli, NH-47, Hosur – 635 126.**
**Phone: 04344 – 278 876, Mail: bmhosur@tiic.org Web: www.tiic.org**

### E-Auction SALE NOTICE
**[Proviso to rule 8(6)]**
**SALE NOTICE FOR SALE OF IMMOVABLE PROPERTIES**

E-Auction Sale Notice for Sale of Immovable Assets under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 read with proviso to Rule 8(6) of the Security Interest (Enforcement) Rules, 2002.
Notice is hereby given to the public in general and in particular to the Borrower (s) and Guarantor(s) that the below described immovable property mortgaged/charged to the Secured Creditor, the constructive possession of which has been taken by the Authorised Officer / The Branch Manager of The Tamilnadu Industrial Investment Corporation Limited, Hosur, Secured Creditor, will be sold on "As is where is", "As is what is" and "Whatever there is" on 30.06.2026 for recovery of **Rs.2,29,04,460/- (Rupees Two Crores Twenty Nine Lakhs Four Thousand Four Hundred and Sixty Only) as on 31.07.2025** and further interest from 01.08.2025 along with other dues to the Authorised Officer/The Branch Manager of The Tamilnadu Industrial Investment Corporation Limited, Hosur, Secured Creditor from **M/s.Saravana Sastha Steel India Private Limited,** Hosur represented by its Directors cum Guarantors 1) **Thiru. V. Muthukrishnan, S/o. Vijayapillai, 2) Thiru. M. Kannikavathi, W/o. Thiru. V. Muthukrishnan, 3) Thiru. M. Nanthakumar, S/o. Thiru. V. Muthukrishnan, 4) Thiru. M. Senthilkumar, S/o. Thiru. V. Muthukrishnan** and Collateral Owner **Thiru. V. Muthukrishnan, S/o. Vijayapillai.** The reserve price will be **Rs. 6,22,00,000/-** (Rupees Six Crores Twenty Two Lakhs only) and the earnest money deposit will be **Rs. 5,00,000/-** (Rupees Five Lakhs only).

**Mortgaged Assets- Immovable Property Details:**

| Description of the property | Upset Price | Earnest Money Deposit (EMD) | Minimum Bid Incremental Amount |
|---|---|---|---|
| **Collateral Security:** at S.No.704/B, As per Patta No.3371 New S.No. 704/B2, Mookondapalli Village, Hosur Taluk, Krishnagiri District admeasuring extent of **1Acre 40 Cents (60984 sq.ft.),** and bounded as on, **East :** S.No.702 **West :** S.No.705 Anjaneyaswamy Temple Manyam Land **North :** Panchayat Road **South :** Remaining Portion in the same survey number belonging to Mrs. Thimmakka. Owned by **Thiru. V. Muthukrishnan, S/o. Vijayapillai.** | **Rs. 6,22,00,000** | **Rs. 5,00,000** | **Rs. 1,00,000** |

| Date of inspection of property | Last date for submission of Bid form, KYC documents & payment of EMD | Date / Time of Auction |
|---|---|---|
| Date: **02.06.2026** Between 11.00 am to 4.00 pm | Date: **29.06.2026** Time: Before 4.00 pm | Date : **30.06.2026** Time : From 11.00 am to 1.00 pm |

**Terms and conditions of e-Auction sales:**

1. Date of inspection of property is **02.06.2026** between **11.00 am to 4.00 pm** and the last date for submission of Earnest Money Deposit (EMD) shall be **29.06.2026** by 4 pm.
2. The sale / auction will start on **30.06.2026** at **11 am** to **1 pm** by the undersigned through e-Auction platform provided at the web portal **https://www.bankeauctions.com**
3. Extension of time of the e-Auction from the last bid is 5 minutes each and the extension is unlimited times (if bid received in the last 5 minutes).
4. Further interest will be charged as applicable, as per the loan agreement on the amount outstanding and incidental expenses, costs, etc. is due and payable till its realization.
5. The bid amount shall be more than upset price. The incremental bid amount is **Rs. 1,00,000/-** or multiples of **Rs.1,00,000/-**
6. EMD shall be paid to the following bank account by way of online transfer. Bank Account No. **410260349**, IFSC code : **IDIB000H011**, Indian Bank, Hosur Branch. The interested bidders shall register themselves in online for the e-auction with the service provider "M/s. C1 India Pvt. Limited" and shall upload the bid participation form, Declaration, Terms and conditions of auction, EMD receipt and KYC documents (e.g. Aadhar, PAN, etc.,) using their login.
7. The bidders are advised to go through the detailed terms and conditions of e-Auction available in the web portal https://www.bankeauctions.com before submitting their bids and taking part in the e-Auction
8. The prospective qualified bidders may avail online training on e-Auction from 'M/s C1 India Private Ltd., No. Plot No.68, 3rd Floor, Sector-44, Haryana – 122 003 (Contact person : Thiru. Prabakaran, Chennai, Mobile No. 7418281709) and email : tn@c1india.com prior to the date of e-auction. Neither the authorized officer / TIIC Ltd., nor M/s C1 India Private Ltd., shall be liable for any internet network problem and the interested bidders to ensure that they are technically well equipped for participating in the e-auction event.
9. The Earnest Money Deposit (EMD) of the successful bidder shall be retained towards part sale consideration and the EMD of the unsuccessful bidders shall be refunded through online mode through their bank account. EMD shall not bear any interest. The successful bidder shall have to deposit 25% of the sale price, adjusting the EMD already paid before 4.30 pm of the next working day after the conclusion of the e-Auction. The balance 75% of the sale price shall be paid on or before 15th day of sale confirmation. In case of default in payment by the successful bidder, the amount already deposited by the offerer shall be liable to be forfeited and the property shall be put to re-auction and the defaulting borrower / bidder shall have no claim / right in respect of the amount / property.
10. The TIIC Ltd., is not responsible for any liabilities upon the property which is not in the knowledge of the TIIC Ltd.,
11. The bidders are required to submit acceptance of the terms and conditions of modality of e-auction given above before participating in the e-auction.

For further details, contact the Branch Manager, The TIIC Limited, Hosur Branch (Mobile No. 9444396853/8870577147)

**Place : Hosur**
**Date : 23.05.2026** DIPR/435/Display/2026

**Authorized Officer**
**The Tamilnadu Industrial Investment Corporation Ltd, Hosur Branch**

## ABS MARINE SERVICES LIMITED

Regd. Off: No 36,Venugopal Avenue, Off Spur Tank Road Chetpet, Chennai,Tamil Nadu, India, 600031.
www.absmarine.com | CIN:L71120TN1992PLC023705

**EXTRACT OF STANDALONE & CONSOLIDATED STATEMENT OF AUDITED FINANCIAL RESULTS FOR THE HALF YEAR ENDED AND FINANCIAL YEAR ENDED 31ST MARCH 2026**

(Rs. In Lakhs)

| Sl. No. | Particulars | Standalone | | | | | Consolidated | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Half year ended 31/03/2026 (Audited) | Half year ended 30/09/2025 (Unaudited) | Half year ended 31/03/2025 (Audited) | Year ended 31/03/2026 (Audited) | Year Ended 31/03/2025 (Audited) | Half year ended 31/03/2026 (Audited) | Half year ended 30/09/2025 (Unaudited) | Half year ended 31/03/2025 (Audited) | Year ended 31/03/2026 (Audited) | Year Ended 31/03/2025 (Audited) |
| 1 | Total Income from Operations | 18,828.35 | 13,953.18 | 10,207.01 | 32,781.53 | 17,550.56 | 18,311.26 | 13,953.22 | 10,233.55 | 32,264.48 | 18,431.34 |
| 2 | Net Profit / (Loss) for the period (before tax, Exceptional and / or Extraordinary items) | 5,100.10 | 3,139.89 | 2,589.03 | 8,239.99 | 3,580.37 | 5,371.69 | 3,264.19 | 2,617.34 | 8,635.88 | 3,651.50 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary items) | 5,100.10 | 3,139.89 | 2,589.03 | 8,239.99 | 3,580.37 | 5,371.69 | 3,264.19 | 2,617.34 | 8,635.88 | 3,651.50 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and / or Extraordinary items) | 4,741.76 | 3,062.47 | 1,966.23 | 7,804.23 | 2,672.35 | 4,946.39 | 3,133.16 | 1,915.59 | 8,079.55 | 2,725.43 |
| 5 | Paid-up Equity Share Capital | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 | 2,455.00 |
| 6 | Earnings Per Share (in Rs.) | | | | | | | | | | |
| | 1. Basic (Rs.) | 19.31 | 12.47 | 8.29 | 31.79 | 11.26 | 19.96 | 12.62 | 8.10 | 32.59 | 11.44 |
| | 2. Diluted (Rs.) | 19.31 | 12.47 | 8.29 | 31.79 | 11.26 | 19.96 | 12.62 | 8.10 | 32.59 | 11.44 |

**Notes:**
1. The above is an extract of the detailed format of Audited Standalone and consolidated financial results for the half year and year ended 31.03.2026 filed with the Stock exchanges under Regulation 33 of the SEBI ( Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Audited financial results for half year and year ended 31.03.2026 is available on the Stock Exchange websites at www.nseindia.com and also on the Company's website at www.absmarine.com.
2. The above Audited results were reviewed by the Audit Committee and approved by the Board of Directors of the Company at its meeting held on 21st May,2026.
3. The Company has only one Segment , Shipping Services.Therefore, in accordance with AS 17, no seperate segment disclosure is required, as the Company operates in a single reportable segment.
4. Previous period's figures have been regrouped/ reclassified whereever required.

Place: Chennai
Date: 21/05/2026

BY ORDER OF THE BOARD
**FOR ABS MARINE SERVICES LIMITED**
SD/-
**CAPT.PALLIYIL NARAYANAN BALACHANDRAN**
CHAIRMAN AND MANAGING DIRECTOR
DIN: 00205686.

## EAST COAST RAILWAY

Tender No. CAOCRSPBBS-24-2026
**NAME OF WORK :** (1) CONSTRUCTION OF ROAD OVER BRIDGE (ROB) AT RAILWAY KM. 531/1-3 OF (1 X 60.0 M) CAMEL BACK TYPE TRUSS GIRDER AND 10 X 20.04 M RCC T-BEAM GIRDER ON NH-16 SIDE AND 8 X 25.0 M ON BARKUL PANTHA NIWAS SIDE FOR APPROACH PORTION, IN LIEU OF LEVEL CROSSING NO.-261 AT KM. 531/3-5, IN BETWEEN STATIONS BALUGAON (BALU) & CHILKA (CLKA) ON HOWRAH-VISAKHAPATNAM MAIN LINE UNDER KHURDA ROAD DIVISION. (2) CONSTRUCTION OF ROAD OVER BRIDGE (ROB) WITH 1 X 60.00 M CAMEL BACK TYPE TRUSS GIRDER FOR RAILWAY PORTION AT KM. 538/15-17 IN LIEU OF LEVEL CROSSING NO. 267, AND PROPOSED SPAN OF 8 X 20.04 M ON NH-16 SIDE AND 7 X 25.04 M ON PATHARA JETTY SIDE FOR APPROACH PORTION AT KM. 538/19-21 BETWEEN CHILKA (CLKA) AND KHALLIKOTE (KLT) STATIONS ON THE HOWRAH-VISAKHAPATNAM MAIN LINE UNDER KHURDA ROAD DIVISION.
**Advertised Value :** ₹ 122,05,33,081.21, **EMD :** ₹ 2,44,10,700/-, **Period of Completion : 24 Months.**
**Bidding Start Date : 05.06.2026**
**Tender Closing Date and Time : At 1200 Hrs. of 19.06.2026.**
Manual offers are not allowed against this tender, and any such manual offer received shall be ignored.
Complete information including e-Tender documents and corrigendum is available in website **www.ireps.gov.in**

**Dy. Chief Engineer / CON / RSP / Bhubaneswar**
PR-55/CJ/26-27


indianexpress.com



I look at every side before taking a side.
Inform your opinion with insightful perspectives.
The Indian Express.
For the Indian Intelligent.
The Indian EXPRESS
JOURNALISM OF COURAGE